R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2018-2020
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2018-2020
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2019 at Batlagundu Post office.
May 2019



"சிதறிப்போனவர்கள் எங்கந்திரிந்து,
சுவிசேஷவசனத்தைப் பிரசங்கித்தார்கள்" அப்.:8:4

**மூன்று மாதத்திற்கு ஒரு முறை**
**திருச்சியில் வேர்ல்டு இவான்சலிசம் கூட்டங்கள்**
**வாருங்கள் கலந்து கொள்ளுங்கள்**

Cell : 94435 58041
Phone : 04543 263 278
E-Mail arjunanglory@gmail.com

Office Address
The Word of Christ,
D/5 Rajan Nagar
Batlagundu -624202,
DINDIGUL DIST
TAMIL NADU INDIA

## Our TV Program:

Every Monday 6.00 P.M on Tamilan TV
&
Every Saturday 8.00 P.M on Nambikkai TV

To

Postman Remarks (If Undelivered):
- ☐ Refused
- ☐ No such person
- ☐ Address insufficient
- ☐ Left without instructions
- ☐ Deceased

Our Postal Address:
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi Press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 19 மே 2019 கனி 6

கிறிஸ்துவின் வசனம்
உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும்
பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST



ஆசிரியர்
B. அர்ஜுனன்

www.godpaint.com

**Arjunan in Tamil:**
Every Monday 6:00 - 6:30 pm on Tamilan TV
Every Saturday 8:00 - 8:30 pm on Nambikkai TV

**Hindi TV program:** Sunny, Francis, & Vinay David speaking. Sunday &Tuesday (7:00-7:30) pm on Shubhasandesh Hindi Channel

**P. K. Varghese in Malayalam:**
Every Saturday 6:00-6:30 am on Jai Hind channel TV.




**Philemon & Kingsley in Tamil:**
Every Sunday 6:45 - 7:00 am on Tamilan TV
Every Sunday 3:30 pm on Nambikkai TV



**Rajanayagam in Tamil:**
Every Monday 7:00-7:15 am on Tamilan TV
Every Thursday 9:30-10:00 pm on Tamilan TV
Every Saturday 7:15-7:30 am on Tamilan TV

**P. R. Swamy and Douglas in Tamil:**
Every Sunday to Wednesday at 5:30-5:45 pm on 31 meter band of Sri Lankan radio.



**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6.00 p.m.on Subhavartha channel
Every Wednesday at 6:30 p.m. on Rakshana channel
Every Thursday at 11:00 a.m. on Rakshana channel
Satyavani T.V. online: www.sakthitv.in
Every Wednesday & Friday at 8:00 pm.
Every day at 7:30 a.m. and 3:30 p.m. on Kanthi TV in A. P. only.


**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN


**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
மாத இதழின் உள்ளே...
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16


Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA




## வேத அறிவுப் போட்டி எண்: 225

போட்டியாளர்கள் கவனத்திற்கு,
கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை யை பின்வரும் மாத இதழ்களில் காண்க.

1. நிறுத்து முடியாத ஏராளமான வெண்கலத்தையும், எண்ணிறந்த கேதுரு மரங்களையும் தேவாலயத்தின் வேலைக்காக சம்பாதித்தவன் யார்?
2. அடிமையானவனின் மகன் சுயாதீனமுள்ளவளுடைய குமாரனோடே சுதந்தரவாளியாயிருப்பானா?
3. சீயோன் என்னும் ஆற்றிலே அணைகட்டி அதின் தண்ணீரை தாவீதின் நகரத்திற்கு நேராகத் திருப்பினவன் யார்?
4. தான் நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாத அப்போஸ்தலன் என்றவன் யார்?
5. எஸ்றா என்பவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் வழிவந்தவன் என்பது சரியா?
6. நீங்கள் போதிக்கப்பட்டபடியே, விசுவாசத்தில் உறுதிப்பட்டு, ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக என எழுதும் அப்போஸ்தலன் யார்?
7. அந்த அற்பமான யூதர் செய்கிறது என்ன என்று கோபித்து எரிச்சலடைந்த மனிதன் யார்?
8. இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார் என்ற நம்பிக்கையோடு இந்த வசனத்தை பவுல் எந்த சபைக்கு எழுதினார்?
9. ராஜாவின் நன்மைக்காகப் பேசின மொர்தெகாய்க்கு ஆமான் செய்வித்த தூக்குமரம் எத்தனை முழ உயரமானது?
10. இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அடையாளங்களும், பொய்யான அற்புதங்களும் எவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் வஞ்சகத்தோடும் இருக்கும்?

**வேதாகம ஆய்வு... 17**

**அந்திரேயா**



Andrew

1. தைரியசாலி என்று அர்த்தம்
2. பன்னிருவரில் ஒருவன், சீமோனின் சகோதரன் மத்.10:2; மாற்.1:16
3. முன்னே யோவான்ஸ்நானகனுடைய சீஷன் – யோவா.1:40
4. இவன் இரத்தசாட்சியாக மரித்ததாக சொல்லப்படுகிறது.
5. இவனுடைய தாயை இயேசுவானவர் ஜுரத்திலிருந்து சுகமாக்கினார் – மாற்.1:31
6. சிறுவனிடம் இருந்த அப்பத்தை தெரியப்படுத்தியவன் – யோவா.6:9
7. எருசலேம் மேல் வீட்டில் தங்கியிருந்தவர்களில் இவனும் ஒருவன் – அப்.1:13
8. தியொனீசியு அங்குள்ள சபையில் கண்காணி.

சிறுவர் பகுதி

# சகேயு – Zacchaeus

வேதபகுதி: லூக்கா 19:1-10

-Mohan



பிரியமான பிள்ளைகளே, உங்கள் யாவருக்கும் இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் என் வாழ்த்துக்கள். இன்று நாம் சகேயு என்பவரைப் பற்றிப் பார்ப்போம்.

இவர் ஆயக்காரருக்கு தலைவனும், ஐசுவரியவானுமாய் இருந்தார் என்று மேற்கண்ட வேதபகுதியில் வாசிக்கிறோம். இந்த சகேயு இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவனோ குள்ளமான மனுஷனாக இருந்தபடியால் ஜனக்கூட்டத்தில் அவரைப் பார்க்கமுடியாமல், அவர் போகும் வழியில் முன்னாக ஓடி அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான். அவனுக்குத்தான் எத்தனை அதிகமான வாஞ்சை பார்த்தீர்களா! இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார். அவனுக்கோ மிகுந்த மகிழ்ச்சி. நாமோ அவரைப்பார்க்க இந்த காட்டத்திமரத்தில் ஏறினோம் அவரோ என் வீட்டுக்கு வருகிறேன் என்று சொல்லுகிறாரே என்று நினைத்து சந்தோஷத்தோடே அவரை அழைத்துக்கொண்டு வீட்டுக்குப் போனான்.

அவர் சகேயு வீட்டுக்குப்போவதை கண்ட சிலர் முறுமுறுத்தார்கள். இன்று இருக்கிறார்களே அவர்களைப்போல அன்றும், ஆண்டவர் இந்தப் பாவி வீட்டுக்கு தங்கும்படி போகிறார் என்று சொல்லி முறுமுறுத்தார்கள். சகேயுவுக்கோ ஒரே சந்தோஷம். அவன் ஆண்டவரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். அவனுடைய மனந்திரும்புதலைக் கண்ட கர்த்தர் இந்த வீட்டிற்கு இன்றைக்கு இரட்சிப்பு வந்தது இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்றார்.

இன்று இந்த சகேயுவைப்போல ஆபிரகாமின் குமாரரும் குமாரத்திகளுமாக நாம் மாற வேண்டுமானால் இவனைப்போல மனந்திரும்பவேண்டும். அவன் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். ஒரு ஆயக்காரன் இந்த அளவு மனமாற்றப்பட்டிருக்கிறான் என்றால் நாம் எந்த அளவுக்கு மாற்றப்படவேண்டும். மாறுங்கள் அப்பொழுது கர்த்தர் நம்முடைய வீட்டிற்கும் இரட்சிப்பைக் கட்டளையிடுவார்.

**மனப்பாட வசனம்:**

" இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்"- லூக்கா19:10



திவேர்ட் ஆப் கிரைஸ்ட்
THE WORD OF CHRIST
புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்
மரம் - 19 மே -2019 கனி - 6

ஆசிரியருரை

## உலக வழிபாடுகள்
## The Basic Principles of The World



உலக வழிபாடுகள் ஒரு மனிதனை இரட்சிக்காது. அது மனுஷர்களின் பாரம்பரியத்தை பற்றியதாக இருக்கிறது. பாரம்பரியங்கள் அழிந்துகொண்டேதான் செல்கிறது. அதில் சிலமாற்றங்களை காலத்திற்கு ஏற்றார்போல மாற்றியமைத்துக் கொள்கின்றனர். ஆகையால் "லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டுபோகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல" (கொலோ.2:8). நாங்களும் கிறிஸ்துவைதான் கடவுளாக வழிபடுகிறோம் என்று அநேக பிரிவினைவாதிகள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அவர்களுடைய வழிபாடுகளுக்கும் கிறிஸ்துவுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. இதை நான் சொல்லவில்லை பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. இதை யாரும் மறுக்கமுடியாது. "நீங்கள் எனக்கு ஒப்பாக வெள்ளியினாலே தெய்வங்களையும் பொன்னினாலே தெய்வங்களையும் உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம்" (யாத்.20:23).

இயேசுவுக்கு ஒப்பாகவும் அப்போஸ்தலர்களுக்கு ஒப்பாகவும் ஒரு சொரூபத்தை செய்து இதுதான் தெய்வம் என்று கோடிக்கணக்கான ஜனங்கள் அதை வைத்துக்கொண்டு கும்பிடுகிறார்கள். அந்த தொழுகையை தேவன் ஏற்றுக்கொள்ளார். ஏனென்றால் எனக்கு ஒப்பாக நீங்கள் வெள்ளியினாலும் பொன்னினாலும் தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்கவே வேண்டாம் என்று சொல்லியிருக்கும்போது அதை அவர் அங்கிகரிக்கமாட்டார். ஆக உலக பாரம்பரியம் புறஜாதி மக்களிடமிருந்து வந்தது. அந்த பாரம்பரிய பழக்கவழக்கங்களை தேவன் ஏற்றுக்கொள்ளார். "நீங்கள் கிறிஸ்துவுடனேகூட உலகத்தின் வழிபாடுகளுக்கு மரித்ததுண்டானால், இன்னும் உலக வழக்கத்தின்படி பிழைக்கிறவர்கள்போல, மனுஷருடைய கற்பனைகளின்படியும் போதனைகளின்படியும் நடந்து தொடாதே, ருசிபாராதே, தீண்டாதே என்கிற கட்டளைக்கு உட்படுகிறதென்ன? இவையெல்லாம் அநுபவிக்கிறதினாலே அழிந்துபோகுமே" என்று காண்கிறோம் (கொலோ.2:20-22). ஒருவன் கிறிஸ்து இயேசுவுக்குள் வரும்போது இந்த உலகத்தின் வழிபாடுகள் அவனோடு ஞானஸ்நானத்தில் மரிக்கவேண்டும். அது மீண்டும் தலைதூக்குமேயானால் அவர்கள் முறைப்படியாக இரட்சிக்கப்படவில்லை என்று தான் அர்த்தம். ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது புதிய மனிதனாக இருக்கிறான் பழையவைகள் எல்லாம் ஒழிந்துபோயின எனக் காண்கிறோம். அப்படியிருக்கும்போது, அவனுடைய வாழ்க்கையில் பழையவைகள் துளிர்க்கிறது என்றால் அவன் பாரம்பரிய கட்டுகளில் சிக்கியிருக்கிறான் என காண்கிறோம். மாம்சத்தை பேணக்கூடிய உலக

வழிபாடுகள் மனுஷர்களின் கற்பனையாக இருக்கிறது. தொடாதே, தீண்டாதே, ருசிபாராதே என்பார்கள். இப்படிப்பட்ட போதனைகள் அழிந்துபோகக்கூடியவைகள். "இப்படிப்பட்ட போதனைகள் சுயஇஷ்டமான ஆராதனையையும், மாயமான தாழ்மையையும், சரீர ஒடுக்கத்தையும் பற்றி ஞானமென்கிறபேர்கொண்டிருந்தாலும், இவைகள் மாம்சத்தைப் பேணுகிறதற்கே ஒழிய மற்றொன்றிற்கும் பிரயோஜனப்படாது" (அப்.7:42). இன்றைக்கு அநேகர் மாயமான தாழ்மையையே விரும்புகின்றனர். மாய்மாலக்காரர்கள் மாயமான தாழ்மையாய் நடந்து மற்றவர்களுக்கு குழிபறிப்பார்கள். அப்படிப்பட்டவர்களுடைய வேண்டுதல் மற்றவர்களுடைய நலனுக்காக இருக்காது. தான்மட்டும் நன்றாயிருக்கவேண்டும் என்றே நினைப்பார்கள். சரீரத்தில் இருந்துகொண்டு நாம் தேவனை ஆராதிக்கவேண்டும் என்று தேவன் விரும்புகிறார். அந்த சரீரத்தைக் கீறிக்கொண்டும், விதவிதமான வஸ்திரங்களை உடுத்திக்கொண்டும், பசியோடும், பட்டினியோடும் குதித்துக்கொண்டும் ஒரு விதமான கூச்சலோடும் சப்தத்தோடும் அவரை தொழுதுகொள்ளுவதை தேவன் விரும்புவதில்லை. தேவன் வானங்களிலும் பெரியவர். ஆகையால் தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என காண்கிறோம்.

காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து தேவனை ஆராதிக்கிற கூட்டத்தை நாம் காணமுடிகிறது. "மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" (கொலோ.2;19). தேவனை இப்படித்தான் ஆராதனை செய்யவேண்டும் என்ற போதனை அநேகருக்கு தெரிந்த போதும் அவர்கள் காணாதவைகளில் துணிவாய் நுழைந்து தேவனை ஆராதிக்கவே விரும்புகின்றனர். மிக அருகாமையில் உள்ள இடத்தில் ஆண்டவரைப்பற்றி நன்கு போதனை கொடுப்பார்கள். அப்படியிருந்தாலும் அங்கே அநேகர் செல்வதில்லை. காணாத இடத்தில், பாஷைகள் வித்தியாசப்பட்ட ஒரு இடத்திலுள்ள ஆலயத்தையே அநேகர் நாடுகிறார்கள். கொஞ்ச தூரம் சென்று வந்தால்தான் நலமாக இருக்கும். இன்னும் சொல்லப்போனால் ஜாலியாக சென்று வருவதுபோல இருக்குமா? என்று சொல்லி தொலைவில் இருக்கிற இடங்களுக்கு சென்று கடவுளை வழிபடவே விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து வீணானவைகளை பின்பற்றி வீணராவார்கள். ஆகையால் அன்பு சகோதரனே சகோதரியே உங்களையும் இப்படிப்பட்டவர்கள் மோசம்போக்கிவிடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். நூதனமான காரியங்களை பேசுவதிலும் பின்பற்றுவதிலும் விரும்பமுற்ற அத்தேனே பட்டணத்தாரைப்பற்றி படிக்கிறோம். அங்கே அப்போஸ்தலாகிய பவுல் சுவிசேஷம் அறிவிக்கும்படி சென்றார்; "எப்படியென்றால், நான் சுற்றித்திரிந்து, உங்கள் ஆராதனைக்குரியவைகளைக் கவனித்துப் பார்த்தபொழுது, அறியப்படாததேவனுக்கு என்று எழுதியிருக்கிற ஒரு பலிபீடத்தைக் கண்டேன்; நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன்" என்றார் (அப்.17:23). அறியப்படாத ஒரு கடவுள் இருப்பாரே என்றால் அந்தக் கடவுளுக்கு என்று ஒரு பலிபீடத்தைக் கட்டி ஆராதித்து வந்தார்கள். அந்த அளவு எல்லா கடவுளுக்கும் கோவில்களைக் கட்டி ஆராதித்து வந்திருக்கிறார்கள். ஆகையால் பவுல் நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் அறிவிக்கிறேன் என்று சொல்லி கர்த்தராகிய இயேசுவைக் குறித்தும் அவருடைய உன்னதமான திட்டத்தைக்குறித்தும் அவர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் காணாதவைகளில் துணிவாய் நுழைந்த லீஸ்திரா பட்டணத்து யூப்பித்தருடைய கோவில் பூஜாசாரியை பற்றி படிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுலைக் கொண்டும் பர்னபாவைக் கொண்டும் தேவன் பெரிய காரியங்களைச் செய்தார். இதை அறிந்த அந்தப்பட்டணத்தார்களுடன் கோவில் பூஜாசாரி "எருதுகளையும் பூமாலைகளையும்



**வேதகம கேள்விகள்**

**வேத வசன ஆதாரத்துடன் பதில் கொடுக்கவும்**
**ஆம் எனில் ☑ குறியிடவும்**



**7. பரிசுத்த விவாகத்தைக்குறித்து வேதாகமபோதனை என்ன?** ***தற்சோதனை பகுதி - 7***

1. விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளது ☐ வசன ஆதாரம் -
------------------------------------------------------------

2. விவாகம் பண்ணினால் பாவம் ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------

3. கர்த்தருடைய கட்டளை மனைவி புருஷனைவிட்டு பிரியக்கூடாது
☐ வசன ஆதாரம் ------------------------------------------------

4. புருஷன் மனைவியை விட்டு பிரிந்துபோகலாம் ☐ வசன ஆதாரம்-
------------------------------------------------------------

5. புருஷன் தன் மனைவியை தள்ளிவிடக்கூடாது ☐ வசன ஆதாரம்
------------------------------------------------------------

6. மனைவி தன் புருஷனை விட்டு விட்டு வேறொருவனை விவாகம் பண்ணலாம் ☐ வசன ஆதாரம் -----------------------------------

7. அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான் ☐ வசன ஆதாரம் ------------------------------------------------

8. ஆகையால் அவிசுவாசியை ஒரு விசுவாசப் பெண் விவாகம்பண்ணலாம் ☐ வசன ஆதாரம் --------------------------

9. அவிசுவாசியான மனைவி புருஷனோடே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன்
☐ வசன ஆதாரம்------------------------------------------------


10. எனவே விசுவாசமுள்ள ஒருவன் ஒரு அவிசுவாசி பெண்ணை விவாகம் செய்துகொள்ளலாம் ☐ வசன ஆதாரம் ----------------------------------

**இது உங்களுக்கான தற்சோதனை: சரியானதை கண்டுபிடித்து குறியிடுங்கள்**
**வசன ஆதாரத்துடன் குறித்துவைத்துக்கொள்ளுங்கள். மற்றவர்களோடு பகிர்ந்துகொள்ளுங்கள்.**
**இப்பகுதியை கத்தரிப்பதோ அல்லது வெட்டியெடுப்பதோ குற்றம்.**
**இதை எங்களுக்கு அனுப்ப வேண்டாம். இது ஒரு வேதாகம ஆராய்ச்சி!**

## விசுவாச ஓட்டத்தை ஓடுவது

## Running The Race of Faith

(எபிரெயர்12:1-3) பாடம் - 32 -Jerry




1 . இந்த முக்கியத்துவம் நம்முடைய விசுவாச வாழ்க்கையில் ஒரு a.ஓட்டம் என்று விவரிக்கப்பட்டுள்ளது. இது தொடர்கிறது.

இந்த ஓட்டத்திலே நாம் மேகம் போன்ற பெருந்திரளான சாட்சிகளால் சூழப்பட்டுள்ளோம் (எபி.12:1).

1. மேகம் போன்ற சாட்சிகள் என்பது முந்தின அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைக் குறிக்கிறது.

2. அதாவது அந்த பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களான ஆபிரகாம் மோசே மற்றும் பலர்.

b . எந்த வகையிலே அவர்கள் சாட்சிகள்?

1. அது ஒருபோதும் பார்வையாளர் என்ற அர்த்தத்தில் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை. நிச்சயமாக அந்த சாட்சிகள் நம்மை உற்சாகப்படுத்தும் சத்தத்தைப்போட முடியாது. அந்த யோசனையை ஒட்டுமொத்தமாக நிராகரிக்க முடியாவிட்டாலுங்கூட.

2. அந்த வார்த்தை அநேகமாக சாட்சி பகர்ந்தவர்களைக் குறிப்பிடுகிறதாக இருக்கிறது.

a. அவர் வாழ்க்கையிலே விசுவாசத்துக்கு சாட்சிகளாயிருந்தார்கள் (எபி.11:1-45).

b. அவர்களுடைய முன்மாதிரியான வாழ்க்கையில் நாம் விசுவாச ஓட்டத்தை ஓட உற்சாகப்படுத்துகிறார்கள். இறுதிவரை உண்மையாகவே விசுவாசமாக இருக்க முடியும் என்பதை அவர்கள் செய்து காட்டினார்கள்.

2. விசுவாச ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடி முடித்தவர்களின் அடிச்சுவடுகளை நாம் பின் பற்ற முயலும் போது மூன்று காரியங்கள் நம்முடைய பாடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அவசியமாகிறது.

### I. நாம் சிலவற்றைத் தள்ளிவிட வேண்டும் (12:1)

A. வெற்றி பெறவேண்டுமென்று ஓடுகிறவர் அதிகமாயிருக்கிற பளுவையும் மற்ற தடைகளையும் தூர எறிந்து விடுவார். இலேசானதும் அசைவதற்கு உதவக்கூடியதாகவும் உள்ள உடைகளை அணிந்துகொள்ளுவார்.

B.எல்லா பாரம் மற்றும் வில்லங்கமான எதையும் தூரத் தள்ளிவிட்டு, இவைகள் நம்முடைய ஆவிக்குரிய முன்னேற்றத்தை குறைக்கிறவைகள். நம்முடைய கவனத்திலிருந்து பக்கமாய் இழுத்துவிடும். இந்தத் தடைகள் பல இடங்களிலிருந்து வரக்கூடும்.

1. நம்முடைய வீட்டிலுள்ள நாம் நேசிப்பவர்கள்.

2. நம்மைச் சுற்றியிருப்பவர்களின் ஏளனம்.

3. அது நமக்குள்ளிருந்தே வரலாம். பெரும்பாலான ஆசை. இன்பங்கள் பிற.

### C. தள்ளிவிடுவது நம்மை எளிதாக சிக்கவைக்கிற பாவம்.

1. எந்த மற்றும் எல்லா பாவங்களும் தள்ளப்பட வேண்டும். இது முக்கியமானபாகமாக இல்லாதபோதிலும் எந்த பாவத்திற்கும் சாக்குப்போக்கு சொல்லிவிட முடியாது.

2. இந்த இடத்தில் அவிசுவாசம் என்ற பாவத்தை குறிப்பிடலாம். அவிசுவாசம் முழுவதுமாக விசுவாசத்தை விலகச் செய்யக்கூடும். நமக்கு சகித்து போராடும் தன்மை தேவை.



வாசலண்டையிலே கொண்டு வந்து, ஜனங்களோடேகூட அவர்களுக்குப் பலியிட மனதாயிருந்தான்" (அப்.14:13). பர்னபாவை யூப்பித்தர் என்றும் பவுலை மெர்க்கூரி என்றும் சொல்லி புகழ ஆரம்பித்தார்கள். இதை அறிந்த பவுலும் பர்னபாவும் அவர்கள் தங்களுக்கு பலியிடுவதை விரும்பாமல் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு நாங்களும் உங்களைப்போல பாடுள்ள மனுஷர்கள்தானே நீங்கள் இந்த வீணான தேவர்களைவிட்டு, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்குத் திரும்பவேண்டுமென்று உங்களுக்குப் பிரசங்கிக்கிறோம் என்றார்கள். ஆம் பிரியமானவர்களே, இன்றைய உலகம் காணாதவைகளில் துணிவாய் நுழைந்து ஆராதிக்கவேண்டிய தேவனை ஆராதிக்காமல் உலகத்தில் உள்ள மனுஷர்களையும், மூதாதையர்களையும், வானமண்டலங்களிலுள்ளவைகளையும், இயற்கைகளையும், ஆராதித்துக்கொண்டு வருகிறார்கள். மேலும் அப்போஸ்தலர்களைப்போல இயேசுவின் நாமத்தை சொல்ல துணிந்த சில மந்திரவாதிகளைப் பற்றி படிக்கிறோம்; " தேசாந்திரிகளாய்த்திரிகிற மந்திரவாதிகளாகிய யூதரில் சிலர் பொல்லாத ஆவிகள் பிடித்திருந்தவர்கள்மேல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தைச் சொல்லத் துணிந்து, பவுல் பிரசங்கிக்கிற இயேசுவின்பேரில் ஆணையிட்டு உங்களுக்குக் கட்டளையிடுகிறோம் என்றார்கள்" (அப்.19:13). பொல்லாத ஆவிகள் இயேசுவை அறிவோம் நீங்கள் யார் என்று சொல்லி அவைகள் அவர்களை எதிர்த்தபடியால் அவர்கள் காயப்பட்டவர்களும் நிர்வாணிகளுமாக ஓடிப்போனார்கள். உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக என்று வேதம் சொல்லுகிறது. கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார் எனக் காண்கிறோம். கர்த்தருடைய நாமத்தை சொல்ல துணிந்தவர்கள் பொல்லாத ஆவிகளினாலே அலைக்கழிக்கப்பட்டார்கள்.

இப்படி வீணாய் பின்பற்றப்படுகிற மனுஷர்களின் பாரம்பரியங்கள் ஒன்றுக்கும் உதவாது. "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று, ஏசாயா தீக்கதரிசி நன்றாய்ச் சொல்லியிருக்கிறான் என்று" நம்முடைய ஆண்டவர் ஜனங்களுக்கு போதிக்கும்போது சொன்னார் (மத்.15:9). உலக வழிபாடுகள் வீணானவைகளாகவே இருக்கிறது. அவைகள் எப்படி வந்தது? அதை ஏற்படுத்தியது யார்? அதனுடைய துவக்க காலம் என்ன? இப்படி பல கேள்விகளைக் கேட்காமல். தன் கண்கள் போனபடியெல்லாம், தங்களுடைய கால்கள் போனபடியெல்லாம் கடவுளை காணமுற்படுகிறார்கள். இயற்கைகள் ஆண்டவருடைய அதிசயமான கிரியைகளாக இருக்கிறது. அவைகள் ஒவ்வொரு நாளும் அவருடைய வல்லமையுள்ள கரத்தை அறிவித்துக்கொண்டிருக்கிறது. இதையெல்லாம் உற்றுநோக்காமல். மனுஷர்களின் பாரம்பரிய போதனைகளுக்கு ஒரு கூட்டம் திரும்புகிறது. "தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத்தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்." (ரோம.1:25). சத்தியம் சத்தியமாகவே இருக்கிறது. இந்த சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி தொழுதுகொண்டுவருகிறார்கள். இஸ்ரவேல் மக்களை மோசே வழிநடத்திக்கொண்டு வந்தபோது அவர் கர்த்தரை சந்தித்துவிட்டு வர சற்று தாமதித்தபோது ஜனங்கள் ஆரோனை நோக்கி அந்த மோசேக்கு என்னவானதோ, எங்களுக்கு முன்செல்லும் தெய்வங்களை உண்டாக்கும் என்று சொல்லி தங்களுடைய காதணிகளையும் மூக்குத்திகளையும் கொண்டுவந்து ஒரு கன்றுக்குட்டியை வார்ப்பித்து எடுத்து அவைகளைத் தொழுதுகொண்டு இதுவே எங்ளை எகிப்திலிருந்து வழிநடத்திக்கொண்டு வந்த தெய்வம் என்று சொல்ல ஆரம்பித்தார்கள். இதை கண்நோக்கிய கர்த்தர் ஜனங்கள் தங்களைக் கெடுத்துக்கொண்டார்கள் என்று சொல்லி மோசேயை துரிதமாக அனுப்பிவைத்தார். அவன் வந்து அதை எடுத்து அக்கினியில் சுட்டெரித்து அதின் சாம்பலை தண்ணீரில் கலக்கி அதை அவர்களுக்கு குடிக்கக் கொடுத்தான். அவைகள் வீணானவைகள் என்பதை அவர்களுக்கு தெரிவிக்கவே

இவ்விதமாக செய்தான். "அவர்கள் தேவனை அறிந்தும், அவரைத் தேவனென்று மகிமைப்படுத்தாமலும், ஸ்தோத்திரியாமலுமிருந்து தங்கள் சிந்தனைகளினாலே வீணரானார்கள்; உணர்வில்லாத அவர்களுடைய இருதயம் இருளடைந்தது" என காண்கிறோம் (ரோம.1;21). ஆகையால் இப்படிப்பட்டவர்களை தேவன் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார். அன்பு சகோதரனே, சகோதரியே நீ எப்படி தேவனை ஆராதித்துக்கொண்டு வருகின்றாய்? உலக வழிபாடுகளுக்குள் சிக்கிக்கொள்ளாமல். வேதாகமத்தின்படி தேவனை தேடு, அவரை தொழுதுகொள்.

**தேவதூதனை தொழுதுகொள்ளலாமா?**

அநேக இடங்களில் தேவதூதர்களைப்போல உருவங்களை வைத்திருக்கிறார்கள். சிலர் அப்படிப்பட்டவைகளை கும்பிடுகிறார்கள். கேட்டால் அவர்கள் தேவனுக்கு வேலைசெய்யும் பணிவிடையாட்கள். ஆகையால், அவர்களை கும்பிடுவதால் தவறில்லை எனக் கருதுகிறார்கள். ஒரு தேவதூதனை வணங்கும்படி யோவான் அவனுடைய காலுக்கு விழும்போது; நடந்த காரியத்தை அவர் வெளிப்படுத்தின புத்தகத்தில் எழுதியிருக்கிறார்; "அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன், அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட உன் சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள், இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்" (வெளி.19:10). தேவனைத் தவிர உலகத்தில் யாரையும் தொழுதுகொள்ளக்கூடாது என்பதை நாம் இந்த வசனத்திலிருந்து அறிந்துகொள்கிறோம். நீங்கள் யாரை தொழுதுகொண்டு வருகிறீர்கள். உலக வழிபாடுகளுக்கு தப்பிக்கொள்ள கர்த்தருடைய வேதத்திற்குத் திரும்புங்கள். நித்தியமானவரை தொழுதுகொண்டு நித்திய நித்தியமான வாழ்க்கையை அவருடைய சமுகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். உங்களுடைய வழிபாடுகள் தேவ சித்தத்தின்படியாக இருக்கட்டும்.

# ஆசிரியரின் கடிதம்...




'தி வேர்டு ஆப் கிரைஸ்ட்' வாசகர் அனைவருக்கும் நம் ஆண்டவர் இயேசுவின் பரிசுத்த நாமத்தில் வாழ்த்துக்கள். வேலூர் மாவட்டத்திலுள்ள கர்த்தருடைய சபையைச் சார்ந்த ஒரு தம்பதியினருக்கு 'தி வேர்டு ஆப் கிரைஸ்ட்' தமிழ் மாத இதழ் கிடைக்கப்பெற்ற மாதத்திலிருந்து ஒவ்வொரு மாதமும் தவறாமல் ரூபாய் 1000/– கொடுத்து இவ்விதழை தாங்கி வருகிறார்கள்.

இவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கும். இவர்கள் தங்களுடைய பொக்கிஷங்களை பரலோகத்திலே சேர்த்து வைக்கிறார்கள். இவர்களை ஒருமுறை சந்திக்கவேண்டுமென்று இவர்களுடைய வீட்டிற்குச் சென்றிருந்தோம். மிகவும் எளிமையாக தங்களுடைய Rtd பென்சனோடு வாழ்ந்துகொண்டிருந்தார்கள். இவர்களுக்குத்தான் இயேசுவின் மீதும் அவருடைய வசனத்தின்மீதும் எவ்வளவு ஆசை!

இப்பூமியிலே தேவன் இவர்களை கிறிஸ்துஇயேசுவுக்குள் தெரிந்துகொண்டார். இவர்களும் இயேசுவுக்காகவே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களுக்காக ஜெபிப்போம். இவர்களைப்போல வாசகர்களாகிய நீங்களும் உங்களுடைய பொக்கிஷங்களை பரலோகத்தில் சேர்த்துவையுங்கள்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!



# நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்

## Evangelizing Our Friends -TVOTI



**அன்பு உங்கள் நண்பர்களுடன்**
**நடைமுறைப்படுத்தப்படவேண்டும்**
**பிரிவு 1, பாடம் -8**
Love Must Be Practiced with Your, Friends

**– சென்ற மாதஇதழின் தொடர்ச்சி**

**எவ்வாறு இதை நாம் பிரயோகிக்கிறோம்?**

ஒவ்வொருவரும் மற்றவர்களிடத்தில் அன்புகூரவும் மற்றவர்களால் அன்புகூரப்படவும் விரும்புகின்றனர். அன்பு கூருதல் எப்போதும் சரியானதே! நி உன் நண்பர்களை நேசிக்கிறாய் என்பதை அவர்கள் அறிந்து கொள்வதற்கு நீ என்ன செய்ய முடியும்? **ஒரு காரியம் நீ தொடர்ச்சியாக அவர்களை நேசிக்கிறாய் என்பதை நீ அவர்களிடம் கூறலாம்.** சில நேரங்களில் நான் உன்னிடத்தில் அன்புகூருகிறேன் என்று சொல்ல கடினமாகத் தோன்றலாம். ஒருவேளை மற்றவர்கள் அதற்கு நமக்கு எவ்வாறு பதிலளிப்பார்கள் என நாம் நிச்சயமற்றவர்களாய் இருக்கலாம். சில நேரங்களில் தேவனுடைய குமாரனை புறக்கணித்தது போல நம்முடைய அன்பையும் மக்கள் புறக்கணிக்கலாம் (யோவா.15:18). நாம் இதற்காக கவலைப்பட அவசியமில்லை. தேவன் மற்றவர்களால் அன்புகூரப்படாத வேளையிலும் அவர் அன்பு செலுத்தினார் (ரோம.5:8). மற்றவர்களை நேசிப்பதன் மூலம் தேவன் மற்றவர்கள் தங்கள் வாழ்வில் அன்புடையவர்களாய் இருக்க அவர்களுக்கென்று ஒரு வாய்ப்பினை உண்டாக்கினார். நாம் மக்களிடம் அன்புகூருகிறோம் என்று அவர்களிடம் கூறும்போது நாமும் இதையே செய்கிறோம். நாம் கடிதம் எழுதுவதன் மூலம் வாழ்த்து அட்டை அனுப்புவதன் மூலம் அல்லது நேரம் கிடைக்கும்போதெல்லாம் " நான் உன்னை நேசிக்கிறேன் என்று கூறும்போது நம்முடைய அன்பினை வெளிப்படுத்துகிறோம்.

"நான் உன்னை நேசிக்கிறேன்" என்று மற்றவர்களிடம் கூறுவது அவசியம் ஏனென்றால் ஜனங்கள் நாம் அவர்களைப் பற்றி என்ன நினைக்கிறோம் என்று அறிந்து கொள்ள விரும்புகிறார்கள். நாம் அவர்களை நேசிக்கிறோம் என்பதை மற்றவர்கள் அறிந்து கொள்ள நாம் அனுமதிக்காமலிருந்தால், பிறகு அவர்களோடுள்ள நமது உறவு முறை குறித்து சகல விதமான எண்ணங்களும் அவர்களது மனதிற்குள் பிரவேசிக்கக்கூடும். துரதிஷ்டவசமாக, நம்முடைய எண்ணங்களைப் பாதிக்கத்ததக்கதாக நாம் கேள்விக்குரிய நினைவுகளுக்கு இடமளிக்கிறவர்களாயிருப்போம். நம்முடைய சொந்த வழியில் உணர்வுகளை சொற்களால் வெளிப்படுத்தாத செய்கை மற்றும் அதனை விளக்குதல் போன்றவற்றை நாம் கவனித்துப் பார்த்துக் கொள்ளவேண்டும் பல நேரங்களில் நம்முடைய புரிந்துகொள்ளுதலில் தவறுகின்றோம் மேலும் நாம் அவர்கள் தங்கள் மனதில் அப்போர்பட்ட எண்ணங்களைக் கொண்டிராத சமயத்தில் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக நாம் அதனை அவர்களுக்குள் புகுத்தவும் செய்யலாம். நாம் அப்படிச் செய்யக்கூடாது ஆனால் நாம் மற்றவர்களிடம் அடிக்கடி அன்பைப் பகிர்ந்துகொள்ளுகிறவர்களாயிருந்தால் தேவனை மகிமைப்படுத்துகிற வகையில் வாழ்கின்றோம் என்பதாகும், பின்பு அவர்கள் நம்மை சந்தேகிக்க எந்த காரணத்தையும் கொண்டிரமாடட்டார்கள்.

| | |
|---|---|
| 42. E. அதிசயம் | - பனைகுடி |
| 43. D. கமலாதேவபிச்சை | - கலுங்குவிளை |
| 44. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 45. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 46. G. பூங்கோதை | |
| 47. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 48. S.R. பெரியசாமி | - சேலூர் |
| 49. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 50. Mrs. சாந்தாதேவி | - தேனி |
| 51. J. மேரிஜெயக்குமாரி | - மதுரை |
| 52. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 53. Mrs. சாந்தாபழனி | - தருமபுரி |
| 54. Mrs. எபிநேசர் | - கடலூர் |
| 55. Mrs. ஏஞ்சலின்நேசமலர் | - கன்னியாகுமரி |
| 56. K. மோகன் | - குமாரபாளை |
| 57. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 58. Mrs. ருக்மணிஜெயசீலின் | - தேனி |
| 59. Mrs. ஜெமிநல்லையா | - கோவை |
| 60. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 61. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 62. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 63. K.M. சாந்தி | - வாழப்பட்டி |

| | |
|---|---|
| 42. Mrs. பிரமிளாரேவதி | - கோவை |
| 43. Mrs. எபிநேசர்எட்வேர்டு | - கடலூர் |
| 44. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 45. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 46. Mrs. பிராங்கலினாஜான் | - ஊட்டி |
| 47. Mrs. தேவதாதேவப்பிரியம் | - சென்னை |
| 48. N. ஜெபத்தாய் | - நாசரேத் |
| 49. Mrs. இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 50. Mrs. அல்லிராணிகாட்வின் | - சென்னை |
| 51. J. ஜாய்கமலம் | - நாசரேத் |
| 52. B. ஞானதீபம்ஜெபராஜ் | - திருநெல்வேலி |
| 53. Mrs. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 54. J. இளவரசிஜோபிதா | - கோவை |
| 55. Mrs. ராஜம்மாள்மனோகரன் | - சென்னை |
| 56. M. முருகன் | - நாமக்கல் |
| 57. E. ஜாய்ஸ்ஹெலன்புனிதா | - சென்னை |
| 58. Mrs. ஜான்ஸி | - ஆனைமலை |
| 59. J. விக்டர்சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 60. Mrs. ஃபுளோராஎழில் | - ஆம்பூர் |
| 61. Mrs. ரூத்ஜெயராணி | - திருநெல்வேலி |

***வீண் சிந்தனைகளை நான் வெறுத்து உமது வேதத்தில் பிரியப்படுகிறேன்*** – *சங்கீதம் 119:113*

## நடப்புச்செய்திகள்

❒ தமிழகத்தில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 3கோடியைத் தாண்டியுள்ளது. இதன் மூலம், மாநிலத்தில் ஆண் வாக்காளர்களைக் காட்டிலும் 6 லட்சத்து 74 ஆயிரத்து 122 பெண் வாக்காளர்கள் கூடுதலாக உள்ளனர்.

❒ மாசடைந்த 351 நதிகளை தூய்மைப்படுத்தி மாசற்றதாக ஆக்க தேசிய திட்டம் வகுப்பதற்காக மத்திய கண்காணிப்பு குழு ஒன்றை தீர்ப்பாயம் அமைத்தது.

❒ சீனாவை விட இரு மடங்கு வேகமாக இந்தியாவின் மக்கள் தொகை வளர்ச்சி கண்டு வருவதை ஐ.நா. அறிக்கை வெளியிட்டுள்ளது.

'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' மாத இதழை ஒவ்வொரு மாதமும் 10ம் தேதியே Whatsapp மூலம் பெற்றுக்கொள்ள 6379350509 என்ற எண்ணோடு தொடர்பு கொள்ளுங்கள் அல்லது 9443558041 என்ற எண்ணுக்கு SMS அனுப்புங்கள்



## பழைய பாவமனிதன் களையப்படுதல்

**Putting Off The Old Man of Sin**

பொய் சொல்லுதல் - **Lying** *-J.C.Choate*



நன்றி மீண்டுமாக கிறிஸ்துவின் நாமத்தில் உங்களிடத்தில் வருகிறேன்.

தற்போதைய நம்முடைய பாடப்பகுதிகளில் நாம் பாவஞ்செய்கிறதான பழைய மனிதனை களைந்துபோட்டு கிறிஸ்துவுக்குள்ளான புதிய மனிதனைத் தரித்துக் கொள்வதைப் பற்றி பேசிக்கொண்டிருக்கிறோம். நமக்குத் தேவையென காண்பித்துக் கொண்டிருக்கிற நம்முடைய அசுத்தத்தை விட்டு விடுவதும், நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற நோக்கத்தில் நம்முடைய வாழ்வில் இருக்கின்ற துன்மார்க்கத்தை விட்டுவிடுவதும் நம்மிடத்தில் விரும்புகின்ற அன்புள்ள மக்களாக இருப்பதுமே நான் சொல்லவேண்டிய காரியமாகும்.

தயவுசெய்து 'பொய் சொல்லுதலை'ப் பற்றி ஒரு சில நிமிடங்கள் என்னோடே கூட கற்றுக்கொள்ள நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். பொய் சொல்லுதல் என்பது அதிகமாக எங்கும் காணப்படுகிற ஒன்றாகும். அத்தோடு அதிகமாக ஒத்துக்கொள்ளக்கூடியதும் நம்முடைய நாட்டில் பாவங்களில் ஒன்றாகவும் இருக்கிறது. நிச்சயமாக இந்த பழைய உலகத்தில் அதிகமானோர் மற்றும் அநேகமாக மக்கள் பரந்து விரிந்து அதிகமானோர் பொய் சொல்வதில் தவறு ஒன்றுமில்லை எனக்காண்கின்றனர். அநேகமாக எல்லோருமே ஒருமுறையோ அல்லது இன்னொரு தடவையோ பொய் சொல்லுகின்றனர். தத்துவம் கொண்ட சில மதங்கள் கூட, "ஒரு பொய் காரியத்தை சாதிக்குமானால் உண்மையை ஏன் பேசவேண்டும் என்கின்றனர்?"அல்லது "பொய் சொல்லுதல் நிச்சயம் தேவையானால், பொய் அனுமதிக்கப்படுகிறது".

நான் பொய் பேசுகையில், நான் ஒரு வஞ்சனைக்காரன், இது உண்மையில்லாதபோது உண்மைக்காக சிலவற்றை சொல்லுகின்றபோதும் நான் பொய்காரன் எனக் கருதப்படுகிறேன். கருப்பு பொய்கள் சொல்லுகிறவர்களும் உண்டு. வெள்ளை பொய்கள் சொல்லுகிறவர்களும் உண்டு. கருப்புப் பொய்கள் மிக அசுத்தமானதும் தவறானதுமாயிருக்கும், ஆனால் வெள்ளைப் பொய்கள் உண்மையை கொஞ்சம் திரித்து விவரிப்பதாயிருக்கிறது, ஆனால் இயற்கையில் எல்லாம் மனப்பூர்வமானதல்ல. ஒரு பொய் எப்படியிருந்தபோதிலும் அது பொய் தான், சிலர் உண்மையைக் காத்துக்கொள்ளும்படி சில விருந்துகளிலிருந்து தப்பிக்கொள்ள ஒரு காரணம் அல்லது மற்றகாரணம் கூறுகின்றனர் என அர்த்தமாகிறது.

கிறிஸ்துவின் மார்க்கம் எல்லா வழிகளிலும் பொய்சொல்லுதலை கண்டிக்கிறது. நம்மை இரட்சிக்கின்ற இதுவே சத்தியம், பொய் அல்ல. பொய் இரட்சிக்குமானால் பிறகு சத்தியம் (உண்மை) பொய்யைக் காட்டிலும் சிறப்பானதாக இருக்கமுடியாது. பொய் சொல்லுவதனால் தவறில்லை என்று சொல்லி தொடர்ந்து ஜீவித்து நீங்கள் நேர்மையாகவும், உண்மையாகவும் நடக்கிறீர்கள் என்று நம்புகிறீர்கள் இந்தக் காரியத்தில் நீங்கள் நேர்மையாகவும் உண்மையாகவும் பொய்யை நம்பி பிறகு காப்பாற்றபடமுடியும். ஆனால் அது உண்மையல்ல. வேதாகமம் அதைப் போதிக்கிறதில்லை.

பழைய ஏற்பாட்டு காலத்துக்கு திரும்புங்கள், பொய் கண்டிக்கப்பட்டது. "பின்னும் கர்த்தர் மோசேயை நோக்கி: ஒருவன் கர்த்தருக்கு விரோதமாக அநியாயம் செய்து, தன் வசத்தில் ஒப்புவிக்கப்பட்ட பொருளிலாவது, கொடுக்கல் வாங்கலிலாவது, தன் அயலானுக்கு மாறாட்டம்பண்ணி, அல்லது ஒரு வஸ்துவைப் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டு, அல்லது தன் அயலானுக்கு இடுக்கண்செய்து, அல்லது காணாமற்போனதைக் கண்டடைந்தும் அதை மறுதலித்து, அதைக் குறித்துப் பொய்யாணையிட்டு, மனிதர்செய்யும் இவைமுதலான யாதொரு காரியத்தில் பாவஞ்செய்தானேயாகில், அவன் செய்த பாவத்தினாலே குற்றவாளியானபடியால், தான் பலாத்காரமாய்ப் பறித்துக்கொண்டதையும், இடுக்கண்செய்து பெற்றுக்கொண்டதையும், காணாமற்போயிருந்து தான் கண்டெடுத்ததையும், பொய்யாணையிட்டுச் சம்பாதித்த பொருளையும் திரும்பக் கொடுக்கக்கடவன்; அந்த முதலைக் கொடுக்கிறதும் அல்லாமல், அதினோடு ஐந்தில் ஒரு பங்கு அதிகமாகவுங் கூட்டி, அதைத் தான் குற்றநிவாரணபலியை இடும் நாளில், அதற்குரியவனுக்குக் கொடுத்து விட்டு, தன் குற்றநிவாரணபலியாக, உன் மதிப்புக்குச் சரியான பழுதற்ற ஆட்டுக் கடாவைக் கர்த்தருக்குச் செலுத்தும்படி, அதை ஆசாரியனிடத்தில் குற்றநிவாரணபலியாகக் கொண்டுவருவானாக. கர்த்தருடைய சந்நிதியில் அவன் பாவத்தை ஆசாரியன் நிவிர்த்திசெய்யக்கடவன்; அப்பொழுது அவன் குற்றவாளியாகச் செய்த அப்படிப்பட்ட எந்தக் காரியமும் அவனுக்கு மன்னிக்கப்படும் என்றார்" என லேவி.6:1-7-ல் நாம் வாசிக்கிறோம். நாம் பொய்சொல்லுதல் அந்நாட்களில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, ஆனால் குற்றம் செய்தவர்கள் தேவையான சீர்திருத்தத்தைச் செய்து அவர்கள் மன்னிக்கப்படும்படிக்கு சரியான தியாக பலியை செய்தனர். மீண்டும், மோசே இஸ்ரவேல் ஜனங்களை கடிந்துகொண்டு "நீங்கள் களவுசெய்யாமலும், வஞ்சனைபண்ணாமலும், ஒருவருக்கொருவர் பொய் சொல்லாமலும் இருங்கள்" என லேவி.19:11 -ல் இவ்விதமாகச் சொன்னார்.

ஞானி சாலமோன், "மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லான்; பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான்" (நீதி.14:5) என்று சொல்லுகிறார். மீண்டும் அவர், "பொய்ச்சாட்சிக்காரன் ஆக்கினைக்குத் தப்பான்; பொய்களைப் பேசுகிறவனும் தப்புவதில்லை" (நீதி.19:5) என்று சொல்லுகிறார். பத்து கட்டளைகளில் 'பொய்' என்ற வார்த்தை காணப்படவில்லை, ஆனால் அந்த கட்டளைகளில் ஒன்று "பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக" (யாத்.20:16) என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் அந்தக் கற்பனையின் அர்த்தம் என்ன? இதன் அர்த்தம் தவறாகச் சொல்லுதல் அல்லது அன்னியனுக்கு எதிராக பொய்யைச் சொல்ல பயன்படுத்துதல். அதன் அர்த்தம் இந்த கற்பனை பிறனுக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்லக்கூடாது அதன்பின் ஒருவன் உண்மையாகவே பொய் சொல்லக்கூடாது அல்லது உண்மையற்ற செயல்களில் தன்னுடைய அந்நியனோடு நடந்து கொள்ளக்கூடாது என்று வாதிடுகிறது.

அப்போஸ்தலனாகிய பேதுரு கிறிஸ்துவுக்குள் உண்மையாக இருக்க வேண்டுமென்று உறுதியாக இருந்தான். அவன் கர்த்தரிடம், நான் உம்மை விட்டு விலகுவதுமில்லை; மறுதலிப்பதுமில்லை என்றான். மற்றவர்கள் அவரை விட்டு விலகிபோய்விட்டபோதிலும் பேதுரு நான் விலகமாட்டேன் என்று சொன்னபடி அவன் விலகவில்லை. கிறிஸ்து அவனிடம் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட இரவு சேவல் கூவுகிறதற்கு முன் அவன் தம்மை மூன்றுதரம் மறுதலிப்பான் என்று சொன்னார். மத்தேயு புத்தகம் 26-



## வேத அறிவுப்போட்டி 222-ன் விடைகள்

| | |
|---|---|
| 1. அமர்ந்திருப்பார் | - செப்.3:17 |
| 2. இனி வருகிறதாயிருக்கிறது | - எபி.4:9 |
| 3. சகரியா | - சகரி.4:10 |
| 4. யாக்கோபு | - யாக்.1:16 |
| 5. மல்கியா | - மல்.3:1 |
| 6. ஒப்புக்கொடுக்கக்கடவர்கள் | - 1பேது.4:19 |
| 7. மகா வாதைகளால் வாதித்தார் | - ஆதி.12:17 |
| 8. பேதுரு | - 2பேது.1:17 |
| 9. கெர்சோம்,எலியேசர் | - யாத்.18:3,4 |
| 10. ஒப்பாயிருப்போமென்று | - 1யோவா.3:2 |

## வேத அறிவுப்போட்டி 223-ன் விடைகள்

| | |
|---|---|
| 1.மூன்று | - லேவி.25:21 |
| 2. யூதா | - யூதா 2 |
| 3. 250பேர் | - எண்.16:2 |
| 4.சர்தை | - வெளி.3:3 |
| 5. சாபத்திற்குள்ளானது | - உபா.7:26 |
| 6. ஆம் | - மத்.12:12 |
| 7. ராகாப் | - யோசு.2:11 |
| 8. யோவான் | - மாற்.1:5 |
| 9. கிதியோன் | - நியாயா.8:28 |
| 10. இயேசு | - லூக்.21:15 |

## வேத அறிவுப்போட்டி எண் 222ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. R. ஞானசிரோன்மணி | - சமையநல்லூர் |
| 2. K. ராணி | - தூத்துக்குடி |
| 3. Mrs. நவரத்தினம்ஞானராஜ் | - நாசரேத் |
| 4. P. ஜெபக்கனி மார்க்ஸ் | - கூமாபட்டி |
| 5. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 6. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 7. Mrs. ஜேன்தர்மராஜ் | - தோட்டக்குடி |
| 8. D. தேவபுஷ்பம் | - நாசரேத் |
| 9. S. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 10. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 11. S. ஜாய் சந்திரா காந்தா | - நெல்லூர் |
| 12. P. சந்திரா டேனியேல் | - நஞ்சான்குளம் |
| 13. R. கஸ்தூரி | - ஒட்டாநத்தம் |
| 14. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 15. Mrs. ஞானம்பிலிப் | - கோவை |
| 16. Mrs. கிறிஸ்டோபல் சாலமோன் | - கோவை |
| 17. Mrs. இளவரசிஜோபிதா | - கோவை |
| 18. Mrs. பிராங்களினாஜான் | - ஊட்டி |
| 19. Mrs. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 20. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 21. B. ஞானதீபம் அருள்ராஜ் | - இடையான்குடி |
| 22. A. ஆலிஸ்குணசீலி | - தூத்துக்குடி |
| 23. S.M. தேவிராஜசிங் | - திருப்பூர் |
| 24. Mrs. ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 25. M. முருகன் | - நாமக்கல் |
| 26. S. அன்னம்மாள் | - தூத்துக்குடி |
| 27. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 28. E. ஜாய்ஹெலன்புனிதா | - சென்னை |
| 29. Mrs. ஹெத்சிசெல்வின் | - சென்னை |
| 30. T. ராஜாத்தி | - கோம்பை |
| 31. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 32. R. அந்தோனியம்மாள் | - கலுங்குவிளை |
| 33. K.S. மாணிக்கவாசகம் | - திருச்சி |
| 34. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 35. N. ஜெபத்தாய் | - நாசரேத் |
| 36. Mrs. தேவதா தேவப்பிரியம் | - சென்னை |
| 37. Mrs. ரூத்ஜெயராணி அன்புராஜ் | - திருநெல்வேலி |
| 38. Mrs. ஜெபாநியூட்டன் | - திருநெல்வேலி |
| 39. J. விக்டர்சுவிசேஷமுத்து | - ஆனந்தபுரம் |
| 40. Mrs. இந்திராஜெபக்கனி | - நாசரேத் |
| 41. Mrs. ஜாய்கமலம் | - நாசரேத் |

## வேத அறிவுப்போட்டி எண் 223ல் வெற்றிபெற்றவர்கள்

| | |
|---|---|
| 1. E. அதிசயம் | - பனைகுடி |
| 2. S. ரூபிஜெயசேகரன் | - கலுங்குவிளை |
| 3. J. மேரிஜெயக்குமார் | - மதுரை |
| 4. Mrs. ஃபுளோராசுந்தர் | - மதுரை |
| 5. Mrs. மேரிநிர்மலாஆபிரகாம் | - மதுரை |
| 6. D. அன்புக்கமலம் | - காரைக்குடி |
| 7. K. ராணி | - மேட்டூர் |
| 8. Tmt. மரகதம்திரவியம் | - கோம்பை |
| 9. R. ஞானசிரோன்மணி | - மதுரை |
| 10. Mrs. ரூபவல்யா | - நாசரேத் |
| 11. Mrs. ஜாய்மேத்யூ | - வி.கே.புரம் |
| 12. Mrs. நவரத்தினஞானராஜ் | - நாசரேத் |
| 13. Mrs. பாலின்மார்ட்டின் | - காரைக்குடி |
| 14. K. ரத்னாபாய்பிரசாத் | - மதுரை |
| 15. J. டயானாடேனியேல் | - சிவகாசி |
| 16. A. டேவிட்ஜெயச்சந்திரன் | - மதுரை |
| 17. P. சந்திரா டேனியேல் | - நஞ்சான்குளம் |
| 18. விடைத் தாளில் பெயர் ஊர் எழுதாதவர் | |
| 19. T. ராஜாத்தி | - கோம்பை |
| 20. S. பார்வதி | - தூத்துக்குடி |
| 21. Mrs. ஞானம்பிலிப்பு | - கோவை |
| 22. Mrs. கிறிஸ்டோபல் | - கோவை |
| 23. Mrs. பாலின்டேனியேல் | - சென்னை |
| 24. Mrs. ஜெபசீலிஜெயக்கொடி | - திருச்சி |
| 25. R. கஸ்தூரி | - ஒட்டநத்தம் |
| 26. M. இராமச்சந்திரன் | - ஒட்டநத்தம் |
| 27. J. செல்வராஜ் | - தூத்துக்குடி |
| 28. N. கமலவேணி | - சென்னை |
| 29. T. ஏஞ்சலின் நேசமலர் | - கன்னியாகுமரி |
| 30. S. தங்கம் | - கன்னியாகுமரி |
| 31. Mrs. ஜெயமணிராஜம்மாள் | - கடலூர் |
| 32. R. அந்தோணியம்மாள் | - கலுங்குவிளை |
| 33. Mrs. ஜேன்தர்மராஜ் | - தோட்டாக்குடி |
| 34. Mrs. ஆலிவ்ஜெயபாலன் | - கோவை |
| 35. S. சாந்தகுமாரி | - நாசரேத் |
| 36. Mrs. பியூலா ஜேசுராஜன் | - புதுச்சேரி |
| 37. S. செல்வராஜ் சாலமோன் | - திருநெல்வேலி |
| 38. Mrs. ரெஜினாசெல்வராஜ் | - நாசரேத் |
| 39. Mrs. தேவபுஷ்பம் | - நாசரேத் |
| 40. J.S. ஜெயாமேரிதாய் | - திண்டுக்கல் |
| 41. Mrs. ருக்மணிஜெயசீலன் | - தேனி |

விட்டுவிலகாதிருந்தாள். இயேசுவை சிலுவையிலறைந்த பிறகும் இயேசுவின் சிலுவையினருகே மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள் (யோவா 19:25). சரி இயேசுதான் சிலுவையிலறையப்பட்டுவிட்டார், இனி நம்வழியே செல்வோம் என்று சென்று விட்டாளா? இல்லை. இயேசுவின் சரீரத்தை எடுத்து கல்லறையில் வைத்த போதும் அங்கேயும் மகதலேனா மரியாள் கல்லறைக்கு எதிராக உட்கார்ந்திருந்தாள் (மத் 27:61). ஜனங்கள் இயேசுவை பிடித்தவுடனே "சீஷர்களெல்லாரும் அவரை விட்டு ஓடிப்போனார்கள்" (மத் 26:56) காரணம் தங்களுக்கும் இந்த கதி வந்துவிடுமோ என்ற பயம். ஆனால் மகதலேனா மரியாளோ "பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்ற வசனத்திற்கேற்ப எந்த பயமுமில்லாதவளாய் இயேசுவின் சரீரம் கல்லறையில் வைக்கப்படும் மட்டும் அங்கேயே இருந்தாள். அதுமட்டுமல்ல, பிற்பாடு ஓய்வு நாள் முடிந்து " வாரத்தின் முதல் நாள் காலையில் அதிக இருட்டோடே மகதலேனா மரியாள் கல்லறை யினிடத்திற்கு வந்து கல்லறையை அடைத்திருந்த கல் எடுத்துப் போட்டிருக்கக் கண்டாள்" (யோவா 20:1) இதையறிந்த சீஷர்கள் வந்து காலியாகயிருந்த கல்லறையைக் கண்டு மீண்டும் தங்களிடத்திற்கே திரும்பிப் போய்விட்டார்கள்.

ஆனால் மரியாளோ கல்லறையினருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள்; இயேசுவினிடத்தில் அவள் கொண்டிருந்த அன்பு தான் எத்தனை! அன்பு சகோதரிகளே, இக்காட்சியை உங்கள் மனக்கண் முன் கொண்டு வந்து பாருங்களேன்! நம்முடைய கலாச்சாரத்தின் படி கல்லறை பக்கம் செல்லவே பயப்படுகிற ஸ்திரீகளுக்கு இது ஒரு சவால் அல்லவா! மேலும் அவள் குனிந்து கல்லறைக்குள்ளே பார்த்து, இரண்டு தூதர்களை தரிசிக்கிறாள். அத்தோடும் நின்று விடவில்லை பின்பு உயிர்தெழுந்த கர்த்தரையே தரிசிக்கிறாள். எத்தனை பாக்கியம் இது! சற்று சிந்தியுங்கள்! அப்போஸ்தலர்களும் அநேக சீஷர்களும் அநேக ஸ்திரீகளும் இயேசுவின் பின்னே திரிந்து ஊழியஞ் செய்தார்கள். அனைவருமே இயேசுவின் மரணத்திற்குப் பின் தங்களுடைய வழியே சென்று விட்டார்கள். ஆனால் இவளோ, இயேசுவை விட்டு விலகவில்லை. இயேசுவை முதன் முதல் தரிசித்தவளும், இயேசுவின் உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதல் அப்போஸ்தலருக்கு சொன்னவளும் மகதலேனா மரியாள்தான். எத்தனை பாக்கியவதி இவள்! அப்படியென்றால் ஸ்திரீகளாகிய நாமும் இந்த பாக்கியத்திற்கு பங்குள்ளவர்கள் என்று தானே பொருள்.

அன்பு சகோதரிகளே! மகதேலானா மரியாள் நமக்கெல்லாம் ஒரு சிறந்த மாதிரியாக விளங்குகிறாள். கர்த்தர் நமக்குச் செய்த நன்மைகளுக்காக , விடுதலைக்காக, ஆசீர்வாதத்திற்காக, இன்னும் எத்தனையோ சிலாக்கியங்களுக்காக அவருக்கு நாம் என்னத்தை செலுத்துவோம்! "உனக்காக நான் மரித்தேனே எனக்காக நீ என்ன செய்தாய்" என்ற தொனி நம் காதில் எப்போதும் விழுந்து கொண்டே இருக்கட்டும். மகதலேனா மரியாளைப் போல் இயேசுவை விட்டு விலகாதிருப்போமானால் பெண்ணாக பிறந்திருக்கிற நாமும் பாக்கியவதிகளாக, அநேகருக்கு பாக்கியங்களைக் கொண்டு செல்லுகிறவர்களாக இருப்போம். கர்த்தர் தாமே நம்மை நற்கந்தமாக மாற்றுவாராக!



ல் நாம் வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத் திரளான ஜனங்கள் பட்டயங்களோடும் தடிகளோடும் கிறிஸ்து ஜெபித்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு வந்து, தான் யாரை முத்தஞ்செய்வேனோ அவர்தான் கிறிஸ்து என்று அடையாளங்காட்டும்படி யூதாஸ் கிறிஸ்துவை வாழ்த்தி முத்தஞ்செய்தான், பிறகு அவர்கள் இயேசு மேல் கைபோட்டு அவரைப் பிடித்தார்கள். தொடர்ந்து வாசியுங்கள், வேதாகமம் கூறுகிறது; "அப்பொழுது , அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள்;சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து: கிறிஸ்துவே, உம்மை அடித்தவன் யார்? அதை ஞானதிருஷ்டியினால் எங்களுக்குச் சொல்லும் என்றார்கள். அத்தருணத்தில் பேதுரு வெளியே வந்து அரமனை முற்றத்தில் உட்கார்ந்திருந்தான். அப்பொழுது, வேலைக்காரி ஒருத்தி அவனிடத்தில் வந்து: நீயும் கலிலேயனாகிய இயேசுவோடேகூட இருந்தாய் என்றாள். அதற்கு அவன்: நீ சொல்லுகிறது எனக்குத் தெரியாது என்று எல்லாருக்கும் முன்பாக மறுதலித்தான். அவன், வாசல் மண்டபத்திற்குப்போனபொழுது வேறொருத்தி அவனைக் கண்டு; இவனும் நசரேயனாகிய இயேசுவோடேகூட இருந்தான் என்று அங்கே இருந்தவர்களுக்குச் சொன்னாள். அவனோ: அந்த மனுஷனை நான் அறியேன் என்று ஆணையிட்டு, மறுபடியும் மறுதலித்தான். சற்றுநேரத்துக்குப் பின்பு அங்கே நின்றவர்கள் பேதுருவினிடத்தில் வந்து; மெய்யாகவே நீயும் அவர்களில் ஒருவன்: உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது என்றார்கள். அப்பொழுது அவன்: அந்த மனுஷனை அறியேன் என்று சொல்லி, சபிக்கவும் சத்தியம்பண்ணவும் தொடங்கினான். உடனே சேவல் கூவிற்று. அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான் (மத்.26:67-75). இப்போது பேதுருவின் பாவம் என்ன? சாதாரணமான பொய் தான். பொய் சொல்லுவதோடு சத்தியம் பண்ணவும் செய்தான். நிச்சயமாக பேதுருவின் செயல் மோசமானதும் தவறானதுமாகும் என நாம் அறிவோம், ஆனால் உடனே அவன் மனங்கசந்து அழுது அறிக்கையிட்டு கர்த்தரிடம் திரும்பினான் அதன்பின் அவன் கிறிஸ்துவின் ராஜ்யத்தில் ஒரு மிகப்பெரிய பிரசங்கியாக மாறினான்.

கிறிஸ்துவின் சபை ஸ்தாபிக்கப்பட்டபின், அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் சொத்துக்களை விற்று அந்த பணத்திலிருந்து உணவும் மற்ற தேவைகளுக்காகவும் எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்களுக்கு உதவியாகக் கொடுத்தார்கள், அவர்களில் தங்கள் கிரயத்திலே ஒரு பங்கை வஞ்சித்து வைத்த அனனியா, சப்பீராள் ஆகியோரின் கதையைப்பற்றி அறிவோம். அவர்கள் இதை உதவிசெய்யும்படி எப்படிக் கொடுத்தார்கள். ஆனால் வேதாகமம் இந்த விஷயத்தில் அவர்கள் ஒரு பங்கை வஞ்சித்து வைத்தார்கள் எனக்கூறுகிறது. உண்மைக்குப் புறம்பாக இது நன்றாக எழுதப்பட்டுள்ளது. அவர்கள் எல்லாவற்றையும் கொடுப்பதைப் போல நடித்தார்கள். இவ்வழியில் அவர்கள் ஒரு பங்கை தங்களுக்கென்று எடுத்து வைத்துவிட்டு கொடுப்பதில் பெருமையைப் பெற்றுக்கொள்வோம் என்று நினைத்திருக்கலாம். பிறகு வேதாகமம் சொல்லுகிறது; "பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கைவஞ்சித்துவைத்து, பரிசுத்த ஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?" (அப்.5:3). பிறகு அவன் சப்பீரளிடம் இது குறித்து கேட்டான். அதன் விளைவு இருவரும் மரித்து, வெளியே கொண்டு போய் அடக்கம் செய்யப்பட்டார்கள், சபையார் எல்லாருக்கும், இவைகளைக் கேள்விப்பட்ட மற்றயாவருக்கும் மிகுந்த பயமுண்டாயிற்று (அப்.5:11). ஏன் அவர்கள் மரணத்தினால் அடிக்கப்பட்டார்கள்? ஏனென்றால் அவர்கள் பரிசுத்த ஆவியினிடத்தில் பொய் சொன்னார்கள்.

இன்றைய நாட்களில் பொய் சொல்லும் ஜனங்களை தேவன் மரணத்தினால் அடிப்பாரானால், எத்தனை பேர் மீதமிருப்பார்கள்? கற்பனை செய்துபாருங்கள் தங்களது வயதைக் குறித்து பொய் சொல்லுகிறவர்கள், வருமான வரியை அரசுக்கு செலுத்தும்படி தங்கள் வருமானம் பற்றி பொய் சொல்லுகிறவர்கள் பற்றி கற்பனை செய்து பாருங்கள். தங்களுடைய பணியைக் குறித்தும் தங்களுடைய கணவனிடமும், தங்களுடைய மனைவியிடமும் தங்கள் குழந்தைகளிடமும் பொய் சொல்லுகிறவர்களைப் பற்றி சிந்தித்துப்பாருங்கள். தவறான சாட்சியையுடைய ஒருவரைப் பற்றியும், தங்களுடைய நடக்கையின் மூலம் ஒருவர் இன்னொருவரை ஏமாற்றுகிற அல்லது வஞ்சிக்கிற ஒருவர் பற்றியும் சிந்தித்துப்பாருங்கள். இவர்கள் எல்லாருக்கும் மத்தியில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசம் கொண்டுள்ளேன் என்கிறவர் தங்கள் காணிக்கை விஷயத்தில் தேவனிடத்தில் பொய் சொல்லுகிறவர்களையும், தாங்கள் ஒன்றும் கொடுக்காமலே கொடுக்கவேண்டுமென சொல்லி கொடுப்பதுபோலவும், அவர்கள் தேவனையும் தங்களுடைய ஐக்கிய மனிதனையும் நேசிக்க வேண்டுமென சொல்லி அதைச் செய்யாமலும் கூட இருப்பதை சிந்தியுங்கள். அநேக ஜனங்கள் தங்கள் பொய்யிலிருந்து விடுபட்டுக்கொள்ளமுடியும் என நினைக்கின்றனர், ஆனால் அவர்களால் முடியாது. சீக்கிரமாக அல்லது தாமதமாக அது அவர்களைப் பிடித்துக்கொள்ளும், ஆனால் அவர்கள் அறிகிறார்கள் அவர்கள் பொய் சொல்லியிருக்கிறார்கள் என்றும் எல்லாவற்றிற்கும் மேலாக அவர்கள் பொய் சொல்லும் போது தேவன் அதை அறிகிறார். யோவான்: "நாம் பாவஞ்செய்ய வில்லையென்போமானால், நாம் தேவனை பொய்யராக்குகிறவர்களாயிருப்போம்" (1யோவா.1:10). பிறகு எல்லா மாய்மாலத்தையும் சிந்தித்துப்பாருங்கள், நீதிமானைப் போல நடிக்கிறவர்கள், பொய் சொல்லுகிற குழுவைவிட ஒன்றும் மேலானவர்கள் அல்ல.

பழைய பிசாசு முழு உலகத்தையும் வஞ்சித்திருக்கிறது என நாம் அறிவுறுத்தப்பட்டோம் (வெளி.12:9). அந்த பிசாசு மனிதனிடம், அவன் சரியாகயிருக்கிறான், போதுமான அளவு நல்லவனாக இருக்கிறான், அவன் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டிய அவசியமில்லை என தொடர்ந்து கூறுகிறான். பொய் சொல்லுவது என்பது ஒன்றுமில்லை. ஆதாமும் ஏவாளும் அவனை நம்பினார்கள். பாருங்கள் அவர்களுக்கும் முழு உலகத்திற்கும் என்ன நடந்ததென்று (ஆதி.3).

தேவனுடைய வார்த்தை பொய் சொல்லுவதை கண்டிக்கிறது. பவுல் தன் நாட்களில் கிறிஸ்தவர்களுக்கு, "ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட மனுஷனைத் தரித்துக்கொண்டிருக்கிறீர்களே" (கொலோ.3:9,10) என்று சொன்னார். யோவான், "சத்தியத்தை நீங்கள் அறியாததினாலல்ல, நீங்கள் சத்தியத்தை அறிந்திருக்கிறதினாலும், சத்தியத்தினால் ஒரு பொய்யுமுண்டாயிராதென்பதை நீங்கள் அறிந்திருக்கிறதினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன். இயேசுவைக் கிறிஸ்து அல்ல என்று மறுதலிக்கிறவனேயல்லாமல் வேறே யார் பொய்யன்? பிதாவையும் குமாரனையும் மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து' (1யோவா.2:21,22) என்று எழுதினார். கடைசியாக, "பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்" (வெளி.21:8) என வாசிக்கிறோம்.

அநேகமான மதத்தில் பொய்களையே பேசுகின்றனர் என்பது கவலைக்குரிய ஒரு பகுதியாயிருக்கிறது.அவர்கள் தேவனுடைய வார்த்தைக்குமாறாக பல விஷயங்களை





பெண்கள் பகுதி

## பாக்கியம் - *Blessing*

-*Glory Arjunan*

பெண்ணாகப் பிறப்பதே ஒரு பாக்கியம்! ஆச்சரியமாயிருக்கிறதா? பெண் குழந்தை ஒன்று பிறந்துவிட்டாலே இடி விழுந்தாற் போல் எண்ணி துக்கப்படுகிறவர்கள் அநேகர். இப்படியிருக்க இது எவ்வாறு சாத்தியமாகும் என்கிறீர்களா? சகோதரிகளே, இது உண்மையிலும் உண்மை, நமது வேதாகமத்தில் ஏழு மரியாள்களைக் காணமுடிகிறது. அந்த ஏழு மரியாள்களின் வரிசையில் ஏழு பிசாசுகளின் பிடியிலிருந்து அற்புதமாய் விடுவிக்கப்பட்டு, அப்போஸ்தலர்களாலும், மற்றவர்களாலும் பெறமுடியாத பாக்கியத்தைப் பெற்ற அந்த பாக்கியவதி மகதலேனா மரியாள். ஆம் உயிர்த்தெழுந்த கர்த்தரை தரிசிக்கும் பாக்கியம் பெற்றவள். தாம் பெற்ற பாக்கியம் பெருக இவ்வையகம் என இயேசு உயிர்த்தெழுந்த நற்செய்தியை முதன் முதலாக சீடர்களுக்கு அறிவித்தவளும் அவளே. இத்தனை பாக்கியத்தைப் பெற்றவள் ஒரு ஸ்திரீ என்றால் நாமும் இதற்கு விதிவிலக்கல்ல.

பாருங்கள், மகதலேனா மரியாள் இயேசுவின் பின்னாலே சென்று ஊழியம் செய்த இயேசுவின் சீஷியானவள். இயேசு தம்மிடத்திலிருந்து ஏழு பிசாசுகளையும் துரத்திவிட்டதினிமித்தம் இயேசுவின் மேல் அளவில்லா அன்பு கொண்டிருந்தாள். அன்பு அவளை நெருக்கி ஏவ தன்னுடைய ஆஸ்திகளால் அவருக்கு ஊழியம் செய்து கொண்டு வந்தாள் (லூக் 82-3). அன்பான சகோதரிகளே, நமதாண்டவர் இயேசு கிறிஸ்து தம்முடைய இரத்தத்தை சிந்தி நம்மை சகல பாவங்களின் பிடியிலிருந்து விடுதலை செய்திருக்கிறார். நாம் கிறிஸ்துவுக்குள் வருவதற்கு முன்னிருந்த நம்முடைய ஜீவியத்தைத் திரும்பி நோக்குவோமானால் பிசாசின் காரியங்கள் ஏராளமாயிருப்பதைக் காணமுடியும். அருவருப்பான பாவச்சேற்றிலிருந்த நம்மை இன்று விடுதலையாக்கி கறைதிரையில்லாமல் பரிசுத்தமாக்கியிருக்கிற நம்முடைய கர்த்தரிடத்தில் மகதலேனா மரியாளைப் போல் அளவில்லா அன்பு கொள்ளுவோமானால் நிச்சயமாய் நாமும் பாக்கியவதிகளாயிருப்போம். மட்டுமல்ல, நம் அன்பிற்கு அடையாளமாக நம்முடைய உடைமைகளால் அவருக்கு ஊழியஞ் செய்வோம். அநேக வீடுகளில் ஸ்திரீகளே வீட்டின் பொக்கிஷதாரிகளாக இருப்பார்கள். தங்களுடைய பிள்ளைகளின் எதிர்காலத்தையே ஓயாது நினைத்து பாலிசிக்கு மேல் பாலிசியை (Policy) அடுக்கிக் கொண்டிருப்பார்கள். அன்பின் சகோதரிகளே, பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள் என வேதம் கூறுவதை நினைவு கூருங்கள். ஆஸ்திகளை விற்று இயேசுவுக்கு ஊழியஞ்செய்த இவளையும் மாதிரியாகக் கொள்ளுங்கள்.

இந்த மகதலேனா மரியாள் முதலாவது தேவனுடைய ராஜ்யத்தை தேடுகிறவளாக இருந்திருக்கிறாள். எனவேதான் இயேசு சென்றவிடமெல்லாம் கூடச்சென்று ஊழியஞ்செய்ததோடல்லாமல் முடிவு பரியந்தம் இயேசுவை

## பொது அறிவுச் சோதனை

**1. ஒரு விமானம் 900 மைல் வேகத்தை எட்டும்போது ஒலியிருக்காது, ஏனெனில்**

அ) அது கீழே விழுந்துவிடும் ஆ) அந்த அளவு வேகத்தில் விமானம் சப்தமிடாது இ) விமானத்தின் வேகம் ஒலியின் வேகத்தைவிட அதிகம்

**2. வௌவால் இருட்டில் எவ்வாறு வேகமாக பறக்கிறது?**

அ) அதன் எதிரொலியால் அறிந்து செயல்படுகிறது ஆ) அவைகளால் இருளில் பொருள்களை பார்க்க முடியும் இ) அவை குறைந்த வேகத்திலே பறக்கின்றன

**3. சந்திரன் காற்று மண்டலத்தைப் பெற்றிருக்கவில்லை, ஏனெனில்**

அ) அதன் தடிப்பு தன்மை குறைவானது ஆ) சந்திரனிலுள்ள பாறைகள் எந்தவிதமான வாயுவையும் வெளிவிடுவதில்லை இ) சூரியனிடமிருந்து அதன் அருகாமை

**4. மலை உச்சியில் உருளைக் கிழங்குகள் வேக அதிக நேரம் எடுத்துக்கொள்கின்றன, ஏனெனில்**

அ) அங்கு காற்றின் அழுத்தம் மிகக் குறைவாக உள்ளது ஆ) அங்கு காற்றின் அழுத்தம் மிக அதிகமாக உள்ளது இ) அங்கு குளிர் அதிகமாக உள்ளது

**5. சமவெப்ப நிலையில் நீரைக் காட்டிலும் நீராவியால் உடம்பில் ஏற்படும் புண்மோசமானது, ஏனெனில்**

அ) அது ஒரு வாயு ஆ) அந்த வெப்ப நிலையில் அது அதிக கலோரி வெப்பத்தை கொண்டிருக்கும் இ) அது குறைந்த அளவு நீரினைக் கொண்டிருக்கும்



விடைகள்: 1. இ 2. அ 3. அ 4. அ 5. ஆ

## தெரிந்துகொள்வோம்

-K.R.K.Ravi Asir

- இந்தியாவில் மிகப்பெரிய நூல்நிலையம் இருக்கும் இடம் கல்கத்தா.
- இந்தியாவில் மே தினத்தை அறிமுகப்படுத்தியவர் சிங்கார வேலர்.
- பாதரசம் அதிகமாகக் கிடைக்கும் நாடு இத்தாலி.
- தோலில் வியர்வைச் சுரப்பி இல்லாத விலங்கு சுண்டெலி.
- உலகிலேயே ரஷ்யாவில்தான் அதிக அளவு கோதுமை விளைகிறது

## ஜெபியுங்கள்

- விடுமுறை நாட்களுக்காக...
- சுகவீனமாயிருக்கும் ஊழியர் சுகுமாருக்காக...
- சுகவீனமாயிருக்கும் விசுவாசி நிகில்க்காக...
- மேமாதங்களில் நடைபெறும் V.B.S கூட்டங்களுக்காக...
- ஜனங்கள் பாவத்திலிருந்து விடுபட...
- சுவிசேஷம் தடையில்லாமல் அறிவிக்கப்பட...
- தேவனுடைய ஜனங்கள் நாட்டில் அதிகரிக்க...





மக்களுக்கு சொல்லுகின்றனர். தேவன் பொய்யுரையாத தேவன் (தீத்து 1:2;எபி.6:18). ஆனால் அநேகர் தேவன் சொல்லியிருக்கிறதற்கு மாறாக பிரசங்கிக்கிறார்கள். எனவே இப்படிப்பட்ட பிரசங்கியார்களும், போதகர்களும் பொய்யையே பிரசங்கிக்கின்றனர் என அறிகிறோம். அவர்கள் இரட்சிக்கப்பட்டிருக்கவேண்டுமென்றும், சபையைப் பற்றியும், எப்படி ஆராதிப்பது என்பது பற்றியும், தேவனுடைய வல்லமை, வரப்போகிற உலகம் போன்றவற்றைப்பற்றி பொய்யாகப் பிரசங்கம் பண்ணுகின்றனர். அவர்கள் பொய்களை மட்டும் பிரசங்கிக்கவில்லை. ஆனால் அவர்களில் அதிகமானோர் தங்களுடைய சொந்த பொய்களை நம்புகின்றனர். ஆனபடியினால் நீங்கள் வஞ்சிக்கப்படாதபடிக்கு இந்த காரியம் உங்களில் காணப்படாதபடி கவனமாயிருக்க உங்களை உற்சாகப்படுத்துகிறேன். வேதாகமம் என்ன போதிக்கிறது என்று காண வேதாகமத்திற்கு திரும்புங்கள். நீங்கள் கேள்விப்பட்ட கர்த்தருடைய வார்த்தையோடு ஒத்துப்பாருங்கள். அதன்பின் வேத வார்த்தைகளை யார் சொன்னது சரியானது என்ற கண்டு விசுவாசியுங்கள்.

ஆனால், நீங்கள் பொய் சொல்லுவது என்பது மிகவும் இழிவான ஒன்றல்ல என்று காரணம் கூறுகிறவர்களில் ஒருவராயிருந்தால், பிறகு நீங்கள் ஒரு பொய்யர் என அழைக்கப்பட விரும்புகிறீர்களா? உங்களுடைய தாய் அல்லது தகப்பன், உங்கள் மனைவி அல்லது உங்களது குழந்தைகள் எல்லாரும் பொய்யர் என முத்திரையிடப்பட விரும்புகிறீர்களா? நிச்சயமாக இல்லை. ஒரு மனிதனிடத்தில் நீங்கள் நம்பிக்கை கொண்டிருக்க முடியாது. ஒரு திரளான கூட்டம் அல்லது சமுதாயம் மிக லஞ்சம் வாங்குகிறதாக மாறியிருக்கும்போது, இது உண்மையாகவே, நீங்களும் நானும் நேர்மையையும் உண்மையையும் நம்பி தொடர்ந்து கைக்கொள்வோம். நாம் நமது அரசை நம்பி, நாம் அதற்காக பணிசெய்கிறோம், நமது பள்ளிக்கூடங்கள், வியாபாரிகள், ஓட்டல் சொந்தக்காரர்கள், வங்கியில் பணிசெய்கிறவர்கள் இன்னும் இவ்வாறாக பலர் உண்மையாக நடந்துகொள்ளமுடியும்.

ஆனபடியினால், நீங்கள் உங்களை ஒரு பாவியெனவும், நீங்கள் இழந்து போனவர்கள் எனவும், உங்களுக்கு மன்னிப்பு தேவையெனவும், நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமெனவும், நீங்கள் உங்களுக்குள் உண்மையாகவும், தேவனிடத்தில் உண்மையாகவும் இருக்கும்படி உங்களை உற்சாகப்படுத்தி, இந்தப் பாடத்தினை முடிக்கின்றேன். நீங்கள் இவைகளைச் செய்தால் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, கிறிஸ்துவே தேவனுடைய குமாரரென்று விசுவாசித்து உங்கள் பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள்ளான உங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டு, உங்கள் பாவங்கள் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அதன்பின் கர்த்தர் உங்களை தமது சபையில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளுவார் (மாற்.16:16; அப்.2:38; அப்.2:47). நீங்கள் இப்படிச் செய்வீர்களென நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.

மீண்டும், நீங்கள் உங்களுடைய பாடத்திற்கும் தேவனுக்கும் கீழ்ப்படிதலுக்கும் உதவியாகயிருக்க முடியுமானால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

"மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது"

நீதிமொழிகள் 20:27

பெண்கள் பகுதி




## இயேசு கிறிஸ்து, ஒரே நித்திய பலி
## Jesus Christ, the Eternal Sacrifice -Betty

- சென்ற மாத இதழின் தொடர்ச்சி

**III. அவருடைய பாத்திரத்தில் மாற்றம் - அவர் தம்மை வெறுமையாக்கினார்:**

**"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது. அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும் தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்" (பிலி.2:5-7).**

1. "வெறுமையாக்குதல்" என்பதன் பொருள் என்ன? பூரணத்துவம்? அன்பு? பரிசுத்தம்? நீதி? - இல்லை - ஆனால் அவருடைய தெய்வீகத்தன்மையிலிருந்த அதிகாரங்களும், வல்லமைகளுமாகும்.

2. ஆனால் இன்னும் அதிகமாய் அவர் தெய்வீகத்தன்மையுள்ளவராயிருந்தாரா?

❒ அவர் தேவன் ஒருவருக்கேஉரிய வல்லமையுடையவராகப் பாவங்களை மன்னித்தார்.

❒ இவர் தேவனாகப் பணிந்துகொள்ளப்பட்டார் (யோவா.9:35-38).

(ஆம், மாம்சத்தில் இருந்தபோதிலும் அவர் தேவனாகயிருந்தார்).

**IV. அவர் குமாரனானார் - மனுஷருடைய சகோதரனுமானார்.**

**"எவ்விதத்திலும் தம்முடைய சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிருந்தது" (எபி.2:17) அவருடைய ஜீவியம் மனுஷனுக்கு இணையாக ஓர் நிர்ப்பந்தமாயிருக்கிறது.**

**1. அவருக்கு ஒரு சரீரம் ஆயத்தமாக்கப்பட்டிருந்தது (எபி.2:14-17) "ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்..." "நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன்...." (எபி.1:5,6).**

**2. அவர் "தேவனுடைய குமாரன்" என்றழைக்கப்பட்டபோதிலும் ஆவியானவரின் பிரதிநிதி, அவருடைய பிறப்பில் தேவனுடைய குமாரனாகவும் நம்முடையவராகவும் (மத்.1:20; யோவா.3:5) இருக்கிறார்.**

3. "முதற்பலனின்" சிறப்பம்சம் (எபி.1:5)

❒ அநேக சகோதரருக்குள்ளே இயேசு முதற்பேறானவராயிருக்கும் பொருட்டு தேவன் முன்குறித்திருக்கிறார் (ரோம.8:29).

❒ அவருடைய ஆவியை நம்முடைய இருதயங்களில் பெறுவதன் மூலம் அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்க புத்திரசுவிகாரத்தை அடைந்தவர்களாக நாம் உணருகிறோம் (கலா.4:4-7).

4. இயேசு ஒரு குமாரனாக பிதாவுக்குக் கீழ்ப்படிதலைக்



கற்றுக்கொண்டார் (எபி.5:8).

5. தம்மைத்தாமே தாழ்த்தியதின் மூலம் அவர் ஞானத்திலும் மற்றெல்லாவற்றிலும் வளர்ந்தார் (லூக்.2:52).

6. அவர் சோதனையை சந்தித்தார் - உண்மையான சோதனை.

**"எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிறார்" (எபி.4:15).**

**"...எல்லாவிதத்திலும் பாடுபட்டு, சோதிக்கப்பட்டவராகயிருக்கிறார், அவர் சோதிக்கப்படுகிற யாவருக்கும் உதவிசெய்யக்கூடியவராகயிருக்கிறார்" (4:15)**

7. அவருடைய ஞானஸ்நானத்தில் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார் (மத்.13:16). 100 சதவீதம் தேவன்? 100 சதவீதம் மனுஷன்? தேவன் தேவனுக்குக் கொடுக்கப்பட்டாரா?

8. சரீரப்பிரகாரமான மற்றும் உணர்வுப்பூர்வமான மறு உத்தரவுகளுக்கான பல எடுத்துக்காட்டுகள் பதிவிடப்பட்டுள்ளது. மாற்கு 10:20ல், ஒரு வாலிப அதிகாரியைப் பார்த்து **அவனிடத்தில் அன்புகூர்ந்தார்** யோவான்13:21ல் தாம் காட்டிக்கொடுக்கப்போவது குறித்தும் மரணத்தைக் குறித்தும் பேசி, **அவர் ஆவியில் கலங்கினார்.** யோவானன் 4:6 ல் அவர் சோர்வடைந்தார் எனக்கூறுகிறார்.

**V. பிதாவுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தல்:**

1. பழைய ஏற்பாட்டில் அவர் பேசின விதத்திலிருந்து மாறுபட்ட விதத்தில் வார்த்தையானவர் மாம்சத்தில் பேசுகிறதை குறிப்பாக யோவான் புத்தகத்தை வாசித்து தெரிந்துகொள்ளுங்கள்.

2. யோவான் 5:26 உடன் யோவான் 1:4 ஒத்துப்போகவில்லை; இது முரண்பாடில்லை; அவருடைய ஜீவியத்தில் ஒரு பலமான மாற்றம் மட்டுமே.

**VI. கடைசியாக தோட்டத்தில் நடப்பித்த ஒப்புக்கொடுத்தல்**

1. அவருடைய மரண வேதனை. ஏன்?

2. அவர் சிலுவையின் நிறைவேறுதலை எதிர்நோக்கிக் கொண்டிருந்தார். மனிதனுக்காக அவருடைய கடைசி ஒப்புக்கொடுத்தலை செய்து கொண்டிருந்த நேரம் அது.

❒ அவர் பாவமாக்கப்பட்டார் (2கொரி.5:21)

❒ அவர் அதிலிருந்து திரும்பியிருந்திருக்க முடியும்

"நான் இப்பொழுது என் பிதாவை வேண்டிக்கொண்டால், அவர் பன்னிரெண்டு லேகியோனுக்கு அதிகமான தூதரை என்னிடத்தில் அனுப்பமாட்டாரென்று நினைக்கிறாயா? (மத்.26:53).

**- தொடரும்**

*Contact Us: 94435 58041*

**JOIN OUR**
**WORLD EVANGELISM BIBLE SCHOOL**
**RIGHT NOW**